R 5928 (page220)

# பரிந்துபேசுபவர் மற்றும் மத்தியஸ்தர் பணிகளுக்கிடையே உள்ள வேறுபாடு

## OFFICE OF ADVOCATE AND MEDIATOR CONTRASTED

திருச்சபை "தேவனுடைய இரகசியம்" என்பது உண்மையே. கிறிஸ்துவும் சபையும் பிரிந்திருக்கிறதும், ஒவ்வொரு பொருளிலும் உலகிலிருந்து தனித்தன்மை பெற்றவைகளுமாய் உள்ளன. இவர்கள் பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு உட்பட்டவர்களும் அல்ல; புதிய உடன்படிக்கைக்கு கீழ்ப்பட்டவர்களும் அல்ல, மாறாக ஒரு விசேஷித்த ஜனங்களாக அழைக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு வளர்ச்சியடைந்து, ஒரு விசேஷித்த உடன்படிக்கையின்கீழ் தங்களை உட்படுத்தியிருக்கின்றனர். இதில் உலகின் ஜனங்கள் ஒருபோதும் பங்கேற்கமுடியாது. இதையே வேதாகமம் பலியின் உடன்படிக்கை என்று வேறுபடுத்தி காண்பிக்கிறது.

"பலியினால் என்னோடுகூட உடன்படிக்கை பண்ணின என் பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்" என்று கர்த்தர் கூறுகிறார். (சங்50:5). இந்த பரிசுத்தவான்களான விசேஷித்த வகுப்பார், கர்த்தராகிய இயேசுவை தங்களது தலையாக பெற்றிருந்து, பலியின் உடன்படிக்கை செய்துள்ளனர். இந்த கூட்டத்தார் தங்கள் பலியின்உடன்படிக்கையை நிறைவுசெய்யும்போது, இந்த யுகத்தின் முடிவுவேளை வந்திருக்கும். இஸ்ரயேலருக்கு மோசே மூலம்கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கை, மோசேக்கு நிஜமாயுள்ள கிறிஸ்துமூலம் உலகிற்கு அளிக்கப்படவிருக்கிறது. ஆனால் மற்றொருவகையில் கூறுவோமானால், நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தர் ஒருவரே. ஆனால் ஆயிரவருட அரசாட்சியின் புதிய பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தரோ, ஒரு புது மனிதனாக இருக்கிறார். இதில் இயேசுகிறிஸ்துவை தலையாகக்கொண்டும், யூதர்களிலிருந்தும் புறஜாதிகளிலிருந்தும் தெரிந்தெடுக்கப்படும் அவரது அங்கங்கள் சரீரமாயும் இருப்பர் என்று அப்போஸ்தலர் அறிக்கையிடுகிறார்.

இயேசுவின் காலத்திலிருந்து துவக்கி, புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் தெரிந்தெடுக்கும் செயல்முறையை செய்துவருகிறார். "மேன்மையான பலிகளே" புதிய உடன்படிக்கையின் அடிப்படையாய் இருந்து, பலிகொடுத்தல் நடைபெற்றுவருகிறது. இந்த சுவிசேஷயுகத்தின்போது, இயேசு உலகிற்காக மத்தியஸ்தர் பணியை துவங்கவோ செய்யவோ இல்லை. உலகமும் தேவனோடு எந்த உறவும் வைத்திருக்கவில்லை. அது தீமைக்குள் படுத்து உறங்குகிறது. மத்தியஸ்தர்தாமே வளர்ச்சியடையும் செய்முறையில் இருந்துவருகிறார். அப்போஸ்தலர் அறிக்கையிடுவதுபோல், தேவன் இயேசுவை முதலாவது உயிரோடெழுப்பி, அதுமுதற்கொண்டு, சபையாரை உயிர்த்தெழுப்பிவருகிறார். வெகுவிரைவில் இவர்களது உயர்த்தெழுதல் முடிவடையும். அப்3:22,23இல் பரிசுத்த பேதுரு, இந்த மத்தியஸ்தர் அல்லது தீர்க்கதரிசியைக் குறித்தே பேசினார் (மேலும் 1தீமோ2:5,6ஐயும் பார்க்கவும்). "அநேக அங்கங்களுக்கு" மத்தியஸ்தராக இருந்து, அவர்களை ஊழியத்துக்கு தகுதிப்படுத்தும்வரை, மற்றவர்களுக்கு மத்தியஸ்தராக இருப்பதில்லை. பலியின் உடன்படிக்கையின்படி பலிசெலுத்துபவரே அவர் வைத்திருக்கும் தகுதியை அடைகிறார். இயேசு ஒரு குழந்தையாக இருந்தபோது, இராஜாவும் இரட்சகருமாக வருங்காலத்தில் விளங்குவார் என்று நம்பப்பட்டு பேசப்பட்டதுபோன்ற உணர்விலேயே, தலையும் சரீரமுமாகிய கிறிஸ்து உலகிற்கு மத்தியஸ்தராக இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர் தற்போது இராஜாவாக மட்டுமே இருந்து, அவரது ஜனங்களில் சிலரை மட்டுமே இரட்சித்திருக்கிறார்.

மத்தியஸ்தரது பணிக்கும், பரிந்துபேசுபவருடைய பணிக்குமிடையே பெரிய அளவில் வேறுபட்ட தனித்தன்மைகள் உள்ளன. தேவனுக்கும் மனுஷனுக்குமிடையே மாபெரும் மத்தியஸ்தராகிய மகிமையடைந்த கிறிஸ்து(சரீரத்துடன் சேர்த்து) ஆயிரமாண்டுகள் மத்தியஸ்தரது பணியைசெய்து, அந்த ஆயிரவருடமுடிவில் அதை நிறைவேற்றிமுடிப்பார். தெய்வீக ஏற்பாட்டிற்கு இசைவாக கொண்டுவரப்பட்டவர்கள் அனைவரையும், முழுமையாக சீர்பொருந்தச்செய்து, அவர்களை பிதாவிடம் அவர் ஒப்படைப்பார். பரிந்துபேசுபவரது பணி வேறுபட்டதாயுள்ளது. இந்த யுகத்தின்போது, சபையினிமித்தமாக இயேசு பரிந்துபேசும்பணியை மட்டும் செய்துவருவதாக வேதாகமம் கூறுகிறது. வருங்காலத்தில் சபைக்கு பரிந்துபேசுதல் அவசியமிராது. உலகிற்கு தற்போது பரிந்துபேசுதல் கொடுக்கப்படுவதில்லை. "நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுபவராயிருக்கிறார்".

சபையாகிய அவரது சரீர அங்கங்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விதத்தில் பரிந்துபேசுபவராக இயேசு இருக்கிறார். அவர் முதலாவதாக, தம் ஈடுபலியின் புண்ணியங்களை நமக்கு அருளிச்செய்து,

நமது நிமித்தமாக அவர் பரிந்துபேசுகிறார். இவ்வாறாக, பிதாவின் பிரசன்னத்திற்கு முன்பாக, நம்மை ஒப்புவிக்கசெய்து, தேவபுத்திரர்களாக ஏற்றுக்கொள்ளச் செய்கிறார். இந்த பரிந்துபேசுதலின் காரணமாக, நாம் பரிசுத்தஆவியைப் பெற்று, கிறிஸ்துவுக்குள்ளான புதுசிருஷ்டிகளாகிறோம். நாம் புதுசிருஷ்டிகள் நிலைக்கு முன்னேறினாலும், நம்மால் செய்யமுடிந்தவற்றை பூரணமாக செய்வதற்கு நம்மால் கூடாததாகையால், இன்னும் தொடர்ந்து நமக்கு பரிந்துபேசுதல் தேவை. புதுசிருஷ்டிகளாக மாம்சத்தில் அபூரணத்தைப் பெற்றிருக்கிற நம்மை முழுமையாக அடக்கி ஆளமுடியாது. ஆதலால், கிருபாசனமும், ஒரு பரிந்துபேசுபவரும் நமக்கு தேவையாயுள்ளது. இவர்மூலமே பிதாவுடனான நமது தற்கால உறவை காத்துக்கொள்ளமுடியும், உலகத்தோடுகூட ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படாதிருக்கமுடியும்.

-----------------------------------

See more Books & Articles at www.foodfornewcreature.com